செய்தி வெளியீடு எண் :30 நாள் :27.04.2020

**தேனி மாவட்டம்**
**கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) தடுப்பு பணிகள்**
**குறித்த ஆய்வுக்கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது:-**

*****

தேனி மாவட்டம், பெரியகுளம் மற்றும் தேனி-அல்லிநகரம் நகராட்சி அலுவலகங்களில் இன்று (27.04.2020) நகராட்சிப்பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) தடுப்பு பணிகள் குறித்து இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத்குமார் அவர்கள் முன்னிலையில், நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததாவது,

மத்திய, மாநில அரசுகள் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்திட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் நோய் தொற்று பராவாமல் தடுத்திடும் வகையில், சுகாதாரப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் காய்ச்சல் தொற்றினால் உலக அளவில் 29 இலட்சத்திற்கு மேலான நபர்கள் பாதிக்கப்பட்டு, 2 இலட்சம் நபர்கள் இதுவரை மரணமடைந்துள்ளனர். நாளொன்றுக்கு உலக அளவில் 75,000 நபர்கள் பாதிக்கப்பட்ட வருகின்றனர். இந்தியாவை பொருத்த வரைக்கும் இதுவரை 27,892 நபர்கள் பாதிக்கப்பட்டு, 872 நபர்கள் மரணமடைந்துள்ளனர். அதில், 20,832 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்திய அளவில் நாளொன்றுக்கு 1,392 நபர்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தமிழகத்தை பொருத்தமட்டில் 1,885 நபர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டு, 24 நபர்கள் மரணமடைந்துள்ளனர். அதில் 1,020 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பி உள்ள நிலையில், மீதமுள்ள 841 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக அளவில் நாளொன்றுக்கு 64 நபர்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்கா, ஜெர்மன் போன்ற நாடுகள் விஞ்ஞானத்திலும், சுகாதாரம் மற்றும் மருத்துவ ஆராய்ச்சிகளிலும் முதன்மை வகித்து வருகிறது. அத்தகைய நாடுகளே தற்போது கொரோனா நோய் தொற்றினால் மிகவும் பாதிப்படைந்துள்ளது. இந்தியாவில் உள்ள மாநிலங்களிலும், குறிப்பாக தமிழகத்தில் அமெரிக்காவில் வாழ்கின்ற தமிழ மக்கள் நாம் தமிழ்நாட்டிலே இருந்திருக்காலம் என கூறும் அளவிற்கு மாண்புமிகு பாரத பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் கொரோன வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்தி, ஆரம்ப காலகட்டத்திலேயே பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, சிறப்பான முறையில் கொரோனா வைரஸ் பராவாமல் கட்டுக்குள் கொண்டு வருவதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தை பெருத்துவரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், காவல் துறையினர் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். தேனி மாவட்டம் மற்ற மாவட்டங்களுக்கு கொரோனா தொற்று நடவடிக்கைகளுக்கு முன் உதரணமாக இருந்து வருகிறது. தடுப்பு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பெரியகுளம் மற்றும் தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதிகளில் தலா 3 நபர்கள் வீதம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 6 நபர்கள் குணமடைந்துள்ளனர்.

மேலும், குற்றவியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 144-இன் கீழ் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளதால் பொதுமக்களுக்கு தேவையான காய்கறி மற்றும் மளிகை பொருட்கள் இல்லங்களுக்கு நேரடியாக சென்று வழங்கிட மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களில் கொரோனா தொற்று பரவிக்கொண்டிருக்கும் நிலையில் தேனி மாவட்டத்தில் கடந்த 12 நாட்களில் கொரோனா புதிய தொற்று ஏற்படவில்லை என்பது ஒரு சாதனையாகும். பெரியகுளத்தின் குறுக்கே ஓடுகின்ற வராகநதி ஆற்றினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திட தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனவே, பொதுமக்களிடம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திட போதிய விழிப்புணர்வுவை ஏற்படுத்திட வேண்டும். தற்போது, கொரோனா தொற்றின் காரணமாக பொதுமக்கள் சுத்தமாக வைத்திருந்ததால் மட்டும் போததது, கொரோனாவிலிருந்து மீண்ட பின்பும் வராகநதி ஆற்றினை சுத்தமாக வைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

நேற்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் போடிநாயக்கனூர், சின்னமனூர், கம்பம், கூடலூர் நகராட்சிகளில் கொரோனா தடுப்பு பணிகள் தொடர்பாக விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து இன்யை தினம் பெரியகுளம் மற்றும் தேனி-அல்லிநகரம் நகராட்சி அலுவலகங்களில், கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) தடுப்பு பணிகள் குறித்து வருவாய்த்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் மற்றும் தொடர்புடைய துறைகளை சார்ந்த அலுவலர்கள் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவத்துக்கொள்கிறேன் மேலும், தாங்கள் மேற்கொண்டு வரும் இப்பணியினை தொடர்ந்து, திறம்பட பணியாற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத்தெரிவித்தார்,

இக்கூட்டத்தில், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி, இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை) ஆர்.தியாகராஜன், தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தலைவர் ஓ.ராஜா, பெரியகுளம் நகராட்சி ஆணையாளர் ஆர்.அசோக்குமார், தேனி-அல்லிநகராட்சி ஆணையாளர் நாகராஜன் மற்றும் சுகாதாரப்பணியாளர்கள், தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**